2. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மாற்றுத் தலைவர்கள் பட்டியல் இப்போது அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரில் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நியமிக்கிறேன்:—

1. திரு. மு. இராமநாதன்
2. திரு. என். கணபதி
3. திரு. பெ. சீனிவாசன்
4. திரு. கே. ஏ. செங்கோட்டையன்
5. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
6. திரு. சி. கோவிந்தராசன்.

3. உரிமைப் பிரச்சினை

அவையில் வரக்கூடிய பொருள்பற்றி முன்கூட்டியே வெளியிட்டதாகக் கூறப்பெறுவது குறித்து

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் உரிமைப் பிரச்சினையை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். பேரவை விதிகளின்படி அதுதான் முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். விதி 221.

"Provided that a question of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business''. என்றிருக்கிறது. ஆகவே, அதற்கு உங்கள் இசைவைக் கோருவதற்கு என்னை அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அளித்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து ஆய்ந்து கொண்டிருக்கிறோம். எனினும், இப்போது தங்களுக்கு இந்த விடை சொல்லப்படுகிறது. பாராளுமன்ற நடைமுறைகளின்படி இந்த அவையில் வரக்கூடிய பொருள்பற்றி முன்கூட்டியே வெளியிடுதல், அவை உரிமைப் பிரச்சினையில் வாராது. அவைக் கூட்டம் நடைபெறும்போது மட்டும் அவற்றை அவையில் முதலில் சொல்வது ஒரு மரபாக உள்ளது. இப்போது எழுப்பப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அவர்களுடைய கட்சியின் தேர்தல் அறிக்கையில் உள்ளதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். எனவே இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் இல்லை.